# ஆசான்களே வணக்கம்!

ஆசிரியப் பெருமக்கள் வதியும்
திசைநோக்கித் தெண்டனிடுகிறோம்!

சூரியன் இல்லையேல்
கோள்கள் இல்லை
நீங்கள் இல்லையேல்
நாங்கள் இல்லை!

எரியும் நெருப்பில்
எத்துணை திரிகள்
பற்ற வைத்தாலும்
அது குறைவதில்லை!

பல்லாயிரம் மாணவர்க்குப்
பகுத்தறிவு கொடுத்தாலும்
உங்கள் குன்றுநிகர் அறிவு
குன்றுவதில்லை!

உங்கள் சாக்பீஸ் சத்தம்
எங்களுக்குச் சங்கீதம்!

உங்கள் கண்டிப்பு
தங்கத்தின்
தலைமேல் விழுந்த உளி!

நீங்கள்
திருத்திக்கொடுத்த தாள்கள்
எங்கள் கடவுச் சீட்டுகள்!

உங்கள் புன்னகை
தகப்பன் தராத தங்கக்காசு!

சிலபேர் இருக்கிறீர்கள்
பலபேர் இறந்துவிட்டீர்கள்
கடைசி மாணவனின்
நினைவுக்குள் இருக்கும்வரை
உங்களுக்கு இறப்பில்லை!

ஆசான்களே வணக்கம்!

(ஆசிரியர் தினத்தையொட்டி எழுதிய கவிதை)



- கவிப்பேரரசு
வைரமுத்து

## திருவேற்காட்டில் புதிய ரேஷன் கடை திறப்பு!

திருவள்ளூர் செப்.8–

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி பகுதியில் ஆவடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி, மற்றும் 15வது நிதிக்குழு மேம்பாட்டு மானியத்திலிருந்து 71 லட்சம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை, பேருந்து நிழல் குடை புதிய தார் சாலை துவக்க விழாக்கள் நடைபெற்றது

இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு திருவேற்காடு நகராட்சி 5 வார்டியில் புதிய ரேஷன் கடை 11 வது வார்டு திருவேற்காடு நகராட்சி எதிரில் புதிய பேருந்து நிறுத்தம் அமைக்க அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்து 6,8,9, ஆகிய வார்டுகளில் தார் சாலை அமைக்க பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் திருவேற்காடு நகரக் கழக செயலாளர் நகர் மன்ற தலைவருமான என்.இ.கே.மூர்த்தி, திருவேற்காடு நகராட்சி ஆணையர் தட்சிணாமூர்த்தி, நகர் மன்ற துணைத் தலைவர் ஆனந்தி ரமேஷ்,

பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல், வார்டு செயலாளர்கள் கவுன்சிலர்கள் பு.பரிசு முத்து, டி.வி. இளங்கோவன், பிரதானம், துரை கோபால், நிர்வாகிகள் பெஞ்சமின், நடராஜ், இ.செல்லதுரை, இளையராஜா, சாந்தி ராஜா, அப்பு(எ)ஜெபராஜ், என். ராஜ், ஆ.நாராயணன், மு.சுரேஷ், நரேஷ், குடியரசு, பேபிஸ்ரீ, நூம்பல் ஆசைதம்பி, அமலேஷ்வரி, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திரு வேற்காடு நகராட்சி பகுதியில் 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை, பேருந்து நிழல் குடை, புதிய தார் சாலை அமைக்கும் பணிகளை சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் .

உடன் நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் அவர்களின் தந்தை இராஜாமணி அவர்களின் மறைவையொட்டி கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கழக கொள்கை பரப்பு செயலாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் ஆகியோர் மறைந்த இராஜாமணி அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, நகரச் செயலாளர் இரா.சக்கரை உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## முத்திரை பதித்துவரும் முதல்வரை முகமலர அகமலர வரவேற்போமே!

தமிழ்நாடு தலைநிமிர்ந்து நின்றிட
தகுதியுடன் முதலிடத்தை வென்றிட
நமதருமை முதல்வர்பல நாடுகட்கு
நற்பயணம் மேற்கொண்டு திரும்புகின்றார்.

செல்லுகிற நாடுகள் அனைத்திலுமே
சிவப்புக்கம்பள வரவேற்பைப் பெறுகின்றார் – பேர்
சொல்லுகிற வகையிலே தமிழன்பர்கள்
சுற்றுமுடன் வருகைதந்து வாழ்த்துகின்றனர்!

செர்மனி இங்கிலாந்து நாடுகளில்
செழிப்பாக பதினைந்தாயிரம் கோடிக்குமேலே
புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதெலாம்
ஒரு ட்ரில்லியன் இலக்கிற்கு அடித்தளங்கள்…!

தமிழ்நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாய்
தரணிபோற்றும் வகையிலே திகழ்ந்திடவே
இமியளவும் சோர்வின்றி இயந்திரமாக
இயங்கியே உழைக்கின்றார் நம்தளபதி…!

முதலீடுகளைப் பெறுவதில் நம்முதல்வரின்
முயற்சிகள் அனைத்துமே வெல்லட்டும்…!
இதுபோல தமிழ்நாடு இதற்குமுன்பு
இருந்ததிலை என்பதைஊர் சொல்லட்டும்!

இந்தியாவில் தொழில்களைத் தொடங்குதற்கு
ஏற்றஇடம்… உகந்தஇடம் தமிழ்நாடெனும்
சிந்தனையை உலகளவில் விதைத்துவிட்டு
திரும்புகிற முதல்வருக்கு கோடி வணக்கம்!

‘ஆக்ஸ்போர்டில்’ பெரியார்படம் திறந்துவைத்ததும்
அம்பேத்கர் தங்கியிருந்த இடம்சென்றதும்
பூக்காடாய் மணக்கிறது.. இப்பயணத்தில்



புகழோங்கு மகுடமாய்த் திகழ்கின்றது…
வாயாலே வடைசுடுவோர் மத்தியிலே
வாகைசூடி செயல்வீரராய் வலம்வருகிற
தாயுமானத் தளபதியை மலர்தூவியே
தலைநிமிர்ந்து பெருமையுடன் வரவேற்போமே!

கவிஞர்
இரவிபாரதி



### நெல்லை வள்ளியூரில்

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ சிறப்பு மருத்துவ முகாம்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை.செப்.8

நெல்லை மாவட்டம்,வள்ளியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் (06.09.2025) அன்று நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை சட்டபேரவைத்தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், முன்னிலை யில் ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தை துவக்கி வைத்தார்.

பின்னர் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தாவது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தினை கடந்த 02.08.2025 அன்று தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதனடிப்படையில்,இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு திசையன்விளையிலும், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்திற்கு கல்லிடைக்குறிச்சி யிலும், களக்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு களக்காடிலும், திருநெல்வேலி மாநகராட்சிக்கு யோவான் மேல்நிலைப் பள்ளியிலும், நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் 7353 நபர்கள் கலந்து கொண்டு உடல்பரிசோதனை செய்து கொண்டனர்.அதில்,82 நபர்களுக்கு தீவிர நோய்கள் கண்டறியப்பட்டு உயர்சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

இம்முகாமில் அடிப்படை சிகிச்சை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மின் இதய வரைபடம்,எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எக்ஸ்ரே மற்றும் முழுமையான இரத்தப் பரிசோதனை,காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறிதல் பரிசோதனைகளும்,ஆரம்பகட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் போன்ற அனைத்து பரிசோதனைகளும் கண்டறியப்படும்) மேலும் பொது மருத்துவம்,அறுவை சிகிச்சை, இதயவியல்,மகப்பேறு மருத்துவம் எலும்பு மற்றும் நரம்பியல், மனநலம், நுரையீரல்,தோல் நோய்,காது மூக்கு தொண்டை மருத்துவம்,கண் மருத்துவம்,பல் மருத்துவம்,ஆயுஷ் மற்றும் இயன்முறை சிகிச்சை போன்ற 17 வகையான சிறப்பு மருத்துவம் மற்றும் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல் போன்ற சேவைகளும் இம்முகாமில் வழங்கப்படுகிறது.

உணவு பாதுகாப்பு துறையின் கலப்படமான உணவுகளை உண்ணகூடாது விழிப்புணர்வு ஏற்படுத்தபட்டு வருகிறது.மேலும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பிரச்சாரமும் சரியாக உண்ணுங்கள் இயக்கம் மூலம் பெற்றோர்களுக்கும்,குழந்தைகளுக்கும் அறிவுரைகள் வழங்கப்படும்.

முழு உடல் பரிசோதனை செய்வதற்கு ரூ.5 ஆயிரம் ஆகும், நமது உடலில் வியாதி உள்ளதா என்பதனை பரிசோதனை செய்தால் தான் தெரிய வரும்.அனைவரின் வீடுகளிலும் முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு அட்டை வைத்து கொள்ள வேண்டும்.சென்னையில் உள்ள அப்பல்லோ மருத்துவ மனையில் கூட மருத்துவ சிகிச்சை 5 இலட்சம் வரம்பிற்குள் எடுத்துக் கொள்ளலாம்.கட்டிட தொழிலாளி, விவசாய கூலி தொழிலாளிகள், தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்படுகின்ற நல வாரிய அட்டைக்கு விண்ணப்பித்து கண்டிப்பாக வாங்கி வைத்துகொள்ள வேண்டும். தொழிலாளிகளுக்கு ஏதும் விபத்து அடைந்து மரணித்தால் அவரது குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் இழப்பீடு கிடைக்கும். தொழிலாளர்கள் வீடு இல்லை என்றால் அவர்கள் வீடு கட்டுவதற்கு ரூ.4 இலட்சம் ரூபாய் கிடைக்கின்றது. அமைப்புசாரா தொழிலாளர்கள் 60 வயதை கடந்த பிறகு அவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் கிடைக்கும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமானிய மக்களுக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். திருநெல்வேலி மல்டி பெசாலிட்டி அரசு மருத்துவமனை மற்றும் கன்னியாகுமரி ஆசாரி பள்ளம் மருத்துவமனை போன்று வள்ளியூரில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்திருக்கின்றார்கள்.இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் முழுவதும் முடிவடைந்து ஜனவரியில் மக்களின் பயன்பாட்டிற்கு வரும்,தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டப்பணியும் நடைபெற்றுகொண்டிருக்கின்றது இன்னும் ஓரிரு மாதங்களில் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு இப்பகுதி மக்களின் இல்லங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும், வள்ளியூரில் வீடுகள் இல்லாத ஏழைகளுக்கு அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படுகிறது. இவ்வாறு மக்களுக்காக சிறப்பான திட்டங்களை கொண்டு செயல்படுத்திகொண்டிருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும்,இப்பகுதி மக்கள் சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.





விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பேரூராட்சியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து இரத்ததானம் முகாமினை பார்வையிட்டார். உடன்மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், மாவட்ட மருத்துவ பணிகள் இணை இயக்குனர்டாக்டர் லதா, மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் செந்தில்குமார்,ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆள வந்தார் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

### தாராபுரம் எஸ்.வி.செந்தில்குமார் ஏற்பாட்டில்

# நஞ்சியம்பாளையம் ஊராட்சியில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில்!

திருப்பூர், செப். 8 –

கழகத் தலைவர், இந்தியாவின் நம்பர் 1 முதல்வராக விளங்கும் திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை என்பதை உணர்ந்து திருப்பூர் மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் ஏற்பாட்டில் தாராபுரம் புறவழிச் சாலையில் அமைந்துள்ள குமரகுரு ஹோட்டல் அரங்கில் 06.09.2025 சனிக்கிழமை இன்று மாலை 4.00 மணியளவில் திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றியம், நஞ்சியம்பாளையம் ஊராட்சி அ.தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர், கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் கோ.ராஜன், அமராவதி அணை பாசன வாய்க்கால் சங்க முன்னாள் தலைவர் என்.பழனிச்சாமி, ஊராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர் நாச்சிமுத்து, தெக்காலூர் அ.தி.மு.க கழக கிளைச் செயலாளர் மற்றும் முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் புஷ்பா, சின்னச்சாமி, கிளை செயலாளர் ஆர்.ஆறுமுகம் ஆகியோர் தலைமையில் ப.முருகேசன், மு.சத்தி, ப.கணேசன், ஆர்.சரஸ்வதி, ஆர்.ஜோதிபாசு, ம.பாக்கியலட்சுமி, நா.கணேசன், க.பத்மாவதி, க. கார்த்திகேயன், கா.கலைவாணி, க.ஈஸ்வரமூர்த்தி, ஈ.செல்வி, ப.முருகேசன், மு.கவின், மு.கலாவதி, மு.கார்த்தி, சு.வேலுச்சாமி, வே.ஈஸ்வரி உள்பட 38 நபர்களும், தெக்காலூர் கிளையில் ரா.பழனிச்சாமி, ப. அண்ணாத்துரை, அ.நவினா, வ. ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி. சுரேஷ், சு.நளினி, ரா.திருமூர்த்தி, தி.துளசி, வ.முருகன், மு.கரு ப்பத்தாள், செ.குணசேகரன், செ.சித்ரா, செ.லோக நாதன், லோ.லதா, வ. வீராச்சாமி, வ.சிவகாமி, வீ. மோகன்குமார், ப. மாகாளி, ப.சிவக்குமார் உள்பட 112 நபர்களும், தெக்காலூர் ஏ.டி.குடி யிருப்பு பகுதியில் ஆ.வீரம்மாள், ஆ.பூபதி, சு.பொன்னுச்சாமி, பொ.லட்சுமி, ரா.குப்புச்சாமி, கு.சித்ரா, கு.சஞ்சய்க்குமார், தொ. மாயவன், மா.ராமாத்தாள், மா.முருகன், மு.சுப்புலட்சுமி, சு.நட்ராஜ், பிரகாஷ், பி. நதியா, ம.ஜெயந்தி, maசு.லட்சுமி, மு.சரோனி, மு.மணிராஜ், ம.சந்தியா, ரா.பழனி யம்மாள், சு.பழனிச்சாமி, சா.சர்க்கரை யம்மாள், தி.கோபால், கோ.பழனி யம்மாள், சி.கனகராஜ், க.தெய்வா னை உள்பட 60 நபர்களும், நஞ்சியம்பாளையம் ஏ.டி.குடியிருப்பு பகுதியில் ரா.பழனிச்சாமி, ப.சித்ரா, ப.அண்ணா த்துரை, அ. நவினா, வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், சு.நளினி, ரா.திருமூர்த்தி, தி.துளசி, வ.முருகன், மு.கருப்பாத்தாள், செ.குணசேகரன், செ.சித்ரா, செ. லோகநாதன், லோ. லதா, வ.வீராச்சாமி, வ.சிவகாமி, வீ. மோகன்குமார், ப. மாகாளி, ப.சிவக்குமார் உள்பட 106 நபர்கள் என மொத்தம் 316 பேர் தங்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் தாய் கழகமான திராவிட மு ன்னேற்றக் கழகத்தில் இணைத்துக்கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவரையும் நம் நெஞ்சமெல்லாம் கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பிலும், தாராபுரம் ஒன்றியக் கழகத்தின் சார்பிலும், கிளைக் கழகத்தின் சார்பிலும் வாழ்த்தி வரவேற்று அனைவருக்கும் கைத்தறி துண்டு அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட செயலாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. கோலியனூர் தெற்கு ஒன்றியம், திருப்பாச்சனூர் ஊராட்சியில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் ஒன்றிய கழக செயலாளர் தே.முருகவேல், ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், ஒன்றிய அவைத் தலைவர் தேவகிருஷ்ணன், துணை செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர் காசிநாதன், ஊராட்சி மன்ற தலைவர் சரவணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் மக்களன்பன், இலக்கிய அணி ராஜ், கிளைச் செயலாளர் சதாசிவம், தர்ஷனா, தனசேகர், அச்சுதன், கலியமூர்த்தி, நாகப்பன், கோவிந்தன், பிரகாஷ், மணிகண்டன், ராஜீவ் காந்தி, ஆகாஷ், பிரேம், எட்டியான், கிருஷ்ணமூர்த்தி, ஐயப்பன், ஆதி, ஒன்றிய மாணவர் அணி வெற்றி, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கௌதம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.